**CC.No. 271/2022 (JM.No.II, DHARMAPURI.)**

**22.05.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

## PW1 : திரு. சர்மிளா த/பெ. துரை

**முதல் விசாரணை**

நான் எர்ரப்பட்டியில் குடியிருந்து கொண்டு பள்ளியில் படித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. 18.11.2020 அன்று காலை சுமார் 08.30 மணிக்கு ஒட்டப்பட்டியில் உள்ள நந்தினி பேட்டரி கம்பெனிக்கு எதிரில் எங்களுடைய வீடு உள்ளது. அங்கிருந்து விஜயா B.Ed காலேஜ் அருகில் என்னுடைய அப்பாவின் சர்மிளா பிளாஸ்டிக் கம்பெனி உள்ளது. அப்பாவிற்கு உணவு கொடுப்பதற்காக நானும், என்னுடைய தோழியான ஸ்ரீதேவியும் என்னுடைய அப்பாவின் வாகனமான YAMAHA TN 29 AQ 5179 என்ற இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு விஜயா B.Ed காலேஜ் அருகில் சென்ற போது இடதுபுறமிருந்து வலதுபுறமாக ரோட்டை கடந்த போது Palsor வாகனத்தின் ஓட்டுநர் நல்லம்பள்ளியிலிருந்து ராயக்கோட்டை செல்வதற்காக வந்த போது வேகமாகவும், நாங்கள் ரோட்டை கடப்பதை கவனிக்காமலும் எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. எனக்கு இடது கை, கால், வலது இடுப்பு ஆகிய இடங்களில் அடிப்பட்டது. என் தோழியான ஸ்ரீதேவிக்கு தலை, முகம், மூக்கு, காது ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் வந்தது, சம்பவயிடத்திலேயே இருவரும் சுயநினைவின்றி மயக்கத்தில் இருந்தோம். கம்பெனியில் வேலை செய்தவர்கள் தருமபுரி அரசு மருத்துவமனை அழைத்து சென்றார்கள். தருமபுரி அரசு மருத்துவமனையில் எனக்கு முதலுதவி செய்யப்பட்டது. என்னுடன் வந்த தோழிக்கு அதிகம் அடிப்பட்டதால் சேலம் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். பின்பு 7 நாட்கள் கழித்து இறந்ததாக கேள்விபட்டேன். இது சம்பந்தமாக மருத்துவமனையில் வைத்து காவல் துறையினர் என்னை விசாரித்தனர். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த சுமார் 5 வருடம் ஆகியிருக்கும் என்றால் சரிதான். அப்போது எனக்கு வயது 13 என்றால் சரிதான். நான் அப்போது எட்டாம் வகுப்பு படித்து வந்தேன். என் அப்பா இயந்திரங்களை வைத்து பிளாஸ்டிக் தொழில் செய்கிறார் என்றால் சரிதான். தகர ஷெட்டில் தான் இயந்திரங்கள் வைத்துள்ளார் என்றால் சரிதான். கொரோனா கால விடுமுறையால் நான் பள்ளிக்கு செல்லாமல் என் அப்பாவிற்கு உணவு எடுத்து சென்றேன் என்றால் சரிதான். அடிப்பட்ட போது இருவரின் அப்பாவும் மருத்துவமனையில் எங்களுடன் இருந்தனர் என்றால் சரிதான். 13 வயதில் ஓட்டுநர் உரிமம் பெற முடியாது என்று விபத்து நடைபெற்ற காலத்தில் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எங்கள் வீடு கலெக்டர் பங்களாவின் அருகில் தெற்கு புறமாக உள்ளது என்றால் சரிதான். அப்பாவின் வியாபாரம் செய்யும் இடத்திற்கு தெற்கு – வடக்கு நோக்கி பயணித்து கிழக்கு நோக்கி வலது புறமாக இருசக்கர வாகனத்தில் திரும்பினோம் என்றால் சரிதான். நான் வலது புறமாக திரும்பிய உடன் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். பல்சர் வாகனத்தின் ஓட்டி வந்தவர் மீது எவ்வித தவறும்

இல்லை என்றாலும், நாங்கள் தான் சாலை விதிகளை பின்பற்றாமல் வாகனத்தை ஓட்டிவந்து கவனக்குறைவால் விபத்து ஏற்படுத்திகொண்டோம் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

CC.No. 271/2022 (JM.No.II, DHARMAPURI.)

22.05.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

## PW2 : திரு. மணிகண்டன் த/பெ. மாதையன்

**முதல் விசாரணை**

நான் மாதேமங்கலத்தில் குடியிருந்து கொண்டு பிளாஸ்டிக் கம்பெனியில் வேலை வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 யை எனக்கு தெரியும். 18.11.2020 அன்று காலை சுமார் 08.30 மணிக்கு நானும், என்னுடன் வேலை செய்யும் வெற்றி என்பவரும் என்னுடைய இருசக்கர வாகனத்தில் வேலைக்கு வந்து கொண்டிருந்தபோது விஜயா B.Ed காலேஜ் அருகில் சர்மிளா பிளாஸ்டிக் கம்பெனி உள்ளது. அங்கு தான் நாங்கள் வேலைக்கு வருவதற்காக வந்த போது சர்மிளா பிளாஸ்டிக் கம்பெனிக்கு எதிரில் இடதுபுறமாக என்னுடைய ஓனரின் மகளான அ.சா.1 ம், அவருடைய தோழியும் Scooty ல் வந்த போது இடதுபுறமிருந்து வலதுபுறமாக ரோட்டை கடப்பதற்காக இருசக்கரவாகனத்தில் வளைத்த போது இடதுபுறமிருந்து ராயக்கோட்டை ரோட்டை நோக்கி வந்த பல்சர் வாகனத்தின் ஓட்டுநர் வேகமாக வந்து அ.சா.1 ன் இருசக்கரவாகனத்தின் மோதியது. அ.சா.1ற்கும், அவருடைய தோழிக்கும் கை, கால், முகம் ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. அவருடைய தோழிக்கு வலது கால் முறிவு ஏற்பட்டது மற்றும் முகம், உடம்பு முழுவதும் காயங்கள் ஏற்பட்டது. நானும், என்னுடன் வந்த வெற்றி என்பவரும் காயம்பட்டவர்களை தூக்க சென்ற போது சத்தம் கேட்டு அ.சா.1 ன் அப்பா சம்பவயிடத்திற்கு வந்தார். ஒரு போக்கு வண்டியில் காயம்பட்ட நபர்களை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு அ.சா.1 ற்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அ.சா.1 ன் தோழிக்கு மேல் சிகிச்சைக்காக சேலம் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். பின்பு 7 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்ததாக கேள்விபட்டோம். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும், வெற்றிவேல் என்பவரும் இருசக்கர வாகனத்தில் வரும் போது விபத்தை நேரில் கண்டோம் என்று போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. பிளாஸ்டிக் கம்பெனியில் நாங்கள் வேலை செய்து கொண்டிருந்த போது விபத்து நடந்ததாக போலீஸார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். மருத்துவமனைக்கு நான் உடன் சென்றிருந்தேன். எனக்கு இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் இல்லை. போலீஸார் என்னை மருத்துவமனையில் வைத்து சம்வதன்று விசாரித்தனர். அதன் பின்னிட்டு போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

ஒப்பம்/−இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

CC.No. 271/2022 (JM.No.II, DHARMAPURI.)

22.05.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

## PW3 : திரு. வெற்றிவேல் த/பெ. பழனிசாமி

**முதல் விசாரணை**

நான் பாளையத்தானூரில் குடியிருந்து கொண்டு பிளாஸ்டிக் கம்பெனியில் வேலை வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 மற்றும் அ.சா.2 தெரியும். 18.11.2020 அன்று காலை சுமார் 08.30 மணிக்கு பாளையத்தானூரிலிருந்து தோக்கம்பட்டியில் உள்ள சர்மிளா பிளாஸ்டிக் கம்பெனிக்கு நானும், மணிகண்டன் என்பவரும் பேருந்தில் சென்ற போது சர்மிளாவும், அவருடைய தோழியும் சர்மிளா பிளாஸ்டிக் கம்பெனியில் உள்ள அப்பாவிற்கு உணவு எடுத்து கொண்டு என்னுடைய ஓனர் வாகனமான TN 29 AQ 5179 என்ற வாகனத்தை எடுத்துக்கொண்டு விஜயா B.Ed கல்லூரியின் முன்பு இடதுபுறமிருந்து வலதுபுறமாக ரோட்டை கடக்க முயன்ற போது நல்லம்பள்ளியிலிருந்து ராயக்கோட்டை நோக்கி பல்சர் வாகனம் ஒன்று அதிவேகமாக வந்தது. இடதுபக்கமாக செல்ல வேண்டிய பைக் வலது புறமாக வந்து அ.சா.1 ன் வாகனத்தின் மீது மோதியது. சர்மிளாவிற்கு இடது புற கை, கால், இடுப்பு, கன்னம் ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. ஸ்ரீதேவி என்பவருக்கு ஒரு கால் எலும்பு முறிவு ஏற்பட்டது. ஒரு கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டது. நானும், மணிகண்டன் என்பவரும் தான் விபத்தை நேரில் பார்த்தோம். நாங்கள் இருவரும் அவர்களை தூக்க சென்ற போது என்னுடைய ஓனர் சத்தம் கேட்டு சம்பவயிடம் வந்தார். வழியாக வந்த வாகனங்களில் காயம்பட்ட இருவரையும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். ஸ்ரீதேவிக்க பலத்த காயம் ஏற்பட்டதால் சேலம் தனியார் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அழைத்துசென்றனர். சிகிச்சை பலனின்றி ஒரு வாரம் கழித்து ஸ்ரீதேவி என்பவர் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறியது போல தான் போலீஸ் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நான் பயணம் செய்த பேருந்து எண் எனக்கு ஞாபகம் இல்லை. அடிக்கடி பேருந்துகளை மாற்றி விடுவதால் அதன் எண் ஞாபகம் இல்லை. கால் நூற்றாண்டாக பேருந்து எண்.19 மட்டும் தான் வந்து செல்கிறது என்றாலும், நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவதன்று சம்பவயிடத்தில் போலீஸ் என்னை விசாரித்தனர். போலீஸ் என்னை அதன் பின்னிட்டு விசாரிக்கவில்லை. இருசக்கர வாகனத்தில் வந்தவர் அதிவேகமாக வந்தார் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பேருந்தில் வந்ததால் சம்பவத்தை காண சாத்தியகூறு இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், அதனால்தான் நான் முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

ஒப்பம்/—இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

**CC.No. 271/2022 (JM.No.II, DHARMAPURI.)**

**22.05.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

## PW4 : திரு. துரை த/பெ. ராமன்

**முதல் விசாரணை**

நான் பாளையத்தானூரில் குடியிருந்து கொண்டு பிளாஸ்டிக் கம்பெனி வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 என்னுடைய மகள் ஆவார். கடந்த 18.11.2020 அன்று நான் பிளாஸ்டிக் குடோனில் வேலை செய்து வந்தேன். காலை சுமார் 08.30–9.00 மணிக்குள் திடீரென சத்தம் கேட்டதால் வெளியே வந்து பார்த்த போது விபத்து ஏற்பட்டிருந்தது. அ.சா.2 மற்றும் அ.சா.3 ம் விபத்து ஏற்பட்டுள்ளது வந்து பாருங்கள் என்று சொன்னார்கள். அப்போது என்னுடைய குடோனிற்கு எதிரில் வந்து பார்த்த போது என்னுடைய மகளான அ.சா.1 ம், பக்கத்து வீட்டு பெண்ணான ஸ்ரீதேவியும் விபத்து ஏற்பட்டு கீழே விழுந்து கிடந்தனர்.நான் Video ல் தான் பார்த்தேன் அந்த விபத்து சம்பந்தமாக நான் எப்போதும் என்னுடைய வாகனத்தை வீட்டில் விட்டுவிட்டு நடந்து தான் 200 மீ தூரத்தில் உள்ள கம்பெனிக்கு நடந்து தான் வருவேன். விபத்து நடந்த அன்றைய தினம் என்னுடைய வாகனமான TN 29 AQ 5179 என்ற YAMAHA RAYஎன்ற Scooty யை எடுத்துக்கொண்டு சர்மிளாவும், ஸ்ரீதேவியும் எடுத்துக் கொண்டு வந்துள்ளனர். அப்போது தான் இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தை பார்த்துவிட்டு ஸ்ரீதேவியின் அப்பாவான சக்திவேலுக்கு தகவல் சொன்னேன். அவரும் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார். இருவரையும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். என்னுடைய பெண்ணான சர்மிளாவுக்கு இடது கால் முட்டி, வலது புற இடுப்பு, கை மற்றும் கன்னத்தில் காயங்கள் ஏறபட்டது. ஸ்ரீதேவி என்பவருக்கு இடது காலில் முட்டிக்கு மேல் தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. தலையின் முன்பக்கமும் பலத்த காயம் ஏற்பட்டது. உடலில் நிறைய காயங்கள் ஏற்பட்டிருந்தது. மேல் சிகிச்சைக்காக ஸ்ரீதேவி என்பவர் சேலம் தனியார் மருத்துவமனையான நீயூரோ பவுண்டேசன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். 6 நாட்கள் மட்டும் அங்கு சிகிச்சையில் இருந்தார். அங்கு முடியாது என்று சொன்னதால் மீண்டும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். அங்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீஸார் என்னை விபத்து நடந்த மறுநாள் என்னுடைய பிளாஸ்டிக் கம்பெனியின் அருகே விசாரித்தனர். அதன் பிறகு போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து நடந்த சமயத்தில் என்னுடைய மகளின் வயது 13 இருக்கும் என்றாலும், உயரம் 155 செ.மீ இருக்கும் என்றாலும் சரிதான். என் மகள் திடமாக தான இருந்தார். இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கான சட்டப்படியான தகுதி மற்றும் உடல்தகுதி இல்லை என்றாலும் சரிதான்.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

CC.No. 271/2022 (JM.No.II, DHARMAPURI.)

22.05.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

## PW5 : திரு. சக்திவேல் த/பெ. முருகேசன்

**முதல் விசாரணை**

நான் எர்ரப்பட்டியில் குடியிருந்து கொண்டு டீவீலர் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 மற்றும் அ.சா.4 என்னுடைய பக்கத்து வீட்டுகாரர் ஆவர். அவர்களை எனக்கு தெரியும். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு காலை 08.30 மணிக்கு என்னுடைய பெண்ணான ஸ்ரீதேவிக்கு அடிப்பட்டுள்ளது என்று அ.சா.4 போனின் மூலம் தகவல் சொன்னார். நேராக நான் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். என்னடைய பெண்ணான ஸ்ரீதேவிக்கு தலை, கால், நெற்றி ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்தார். இங்கு ஆகாது என்று சொன்னதின் பேரில் சேலம் தனியார் மருத்துவமனையான நீயூரோ பஹண்டேசன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு ICU ல் வைத்திருந்தனர். தலையில் மூளை அதிகமாக அடிப்பட்டதால் மேற்கொண்டு சிகிச்சை அளிக்க முடியாது என்று சொன்னதின் பேரில் 7 நாட்கள் கழித்து மீண்டும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு சேர்த்தோம். தருமபுரி அரசு மருத்துவமனையில் என் மகள் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

ஒப்பம்/−இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.